# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 543** **நாள்: 06.10.2026**

**மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா அவர்கள் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை வழங்கி, வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (06.10.2026) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜுனா அவர்கள் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை வழங்கி, வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.கே.ராம்குமார், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் மண்டலம், வார்டு-98 அயனாவரம், யுனைடெட் இந்தியா நகர் 1ஆவது குறுக்குத் தெருவில் உள்ள நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனையில் பிறந்த 5 குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் கீழ் தலா ஒரு கிராம் தங்க மோதிரத்தினை வழங்கினார். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் ஜீன் 22ஆம் தேதி முதல் பிறந்த 6790 குழந்தைகளில் இதுவரை 3823 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மற்றும் பிறக்கும் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் வழங்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இதனைத் தொடர்ந்து, வார்டு-98க்குட்பட்ட அயனாவரம், யுனைடெட் இந்தியா நகரில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடப் பணியின் முன்னேற்றம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அயனாவரம் மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, பள்ளி மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார். மேலும், பள்ளி மாணவர்களுடன் கையுந்து பந்து (Volley Ball) விளையாட்டில் பங்கேற்று விளையாடினார்.

தொடர்ச்சியாக, வார்டு-104க்குட்பட்ட திருமங்கலம் சாலைப் பகுதியில் பாடி 100 அடி சாலையிலிருந்து அண்ணாநகர் மண்டலம், திரு.வி.க நகர் மண்டலங்களின் வழியாகச் சென்று இராயபுரம் மண்டலம் பக்கிங்ஹாம் கால்வாயில் இணையும் வகையில் 10.81 கிலோமீட்டர் நீளத்திலான கால்வாயில் தூர்வாரி, மழை நீர் வடிகால் தடுப்புச் சுவர் கட்டுதல், உயர்த்திக்

கட்டுதல் மற்றும் தடுப்புவேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூ. 66.27 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக, அண்ணா நகர் மண்டலத்திற்குட்பட்ட திருமங்கலம் சாலைப் பகுதியில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாயில் 500 மீட்டர் நீளத்திற்கு தடுப்புச் சுவர் உயர்த்திக் கட்டும் பணி நடைபெற்று வருவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை 10 நாட்களுக்குள் முடித்திட அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு-95க்குட்பட்ட அகத்தியர் நகர் பகுதியில் உள்ள டி.வி.எஸ். கால்வாயினைப் பார்வையிட்டு, மழைக்கு முன்னதாக கால்வாயில் மழைநீர் தேங்காமல் தங்குதடையின்றி செல்லும் வகையில் தூர்வாரி தேவையான பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, அகத்தியர் நகர் பகுதியில் வசிக்கும் மக்களிடம் அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து கேட்டறிந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அதன் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், வார்டு-106க்குட்பட்ட மெட்ரோ ஜோன் அப்பார்ட்மெண்ட் (Metro Zone Apartment) குடியிருப்பில் வசிக்கும் மக்களிடம் அடிப்படை வசதிகள் தேவைகள் குறித்து கேட்டறிந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அதன் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**